செ.வெ.எண்: 17/மே நாள்: 07.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 தேர்தல் வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016 வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் வாக்கு எண்ணும் பணிகளுக்குத் தேவையான முன்னேற்பாடு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ஐ முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளான இராமநாதபுரம், முதுகுளத்தூர், பரமக்குடி, திருவாடனை ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் வாக்கு எண்ணும் பணிகளுக்குத் தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். தேர்தல் வாக்குப்பதிவு நாளான மே -16 அன்று தேர்தல் வாக்குப்பதிவு முடிந்த பின்னர், சட்டமன்ற தொகுதிகள் வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பான முறையில் வைக்கப்படவுள்ள அறைகளை பார்வையிட்டார்.

மேலும் பத்திரிக்கை மற்றும் செய்தியாளர்களுக்கான ஊடக தகவல் அறையினையும் பார்வையிட்டார். அதற்குத் தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், வாக்கு எண்ணும் பகுதிகளில் பாதுகாப்பினை மேம்படுத்திடும் வகையில் தேவையான பேரிகார்டு தடுப்புகள் அமைத்திடவும், தேவையான இடங்களில் சி.சி.டிவி கேமராக்களைப் பொருத்தி கண்காத்திடவும், வாக்கு எண்ணும் நாளான மே-19ஆம் தேதியன்று கழிவறைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும், தங்குதடையின்றி குடிநீர் வசதி ஏற்பாடு செய்திடவும் அலுவலர்களுக்கு ஆலோசனை மற்றும் அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.அலி அக்பர், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (பரமக்குடி) டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (இராமநாதபுரம்) திரு.ராம்பிரதீபன், (திருவாடானை) திரு.ராஜசேகரன், (முதுகுளத்தூர்) திரு.ராமையா, அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி முதல்வர் திரு.சித்திரைவேல், பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் திரு.குருதிவேல்மாறன், இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.மாரி உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**